II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 158/2023**

Deposition of witness for the Plaintiff/ PW1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 17.07.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Giridharan | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை=

நான் 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். 4, 5 பிரதிவாதிகளை பொருத்து எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை=

எனது பாட்டி பெயர் ஆர்.ஆதிலட்சுமியம்மாள் ஆவார். அவரது கணவர் பெயர் ராமச்சந்திரன். அவர்களது பூர்வீகம் வேலூர் மாவட்டம், கொசப்பேட்டை கிராமம் ஆகும். அங்கு அவர்களுக்கு முதலில் ஒரு சொந்த வீடு இருந்தது. வேலூரில் வேறு நிலங்கள் அவர்களுக்கு இல்லை. அந்த வீட்டை எனது பாட்டியின் ஒரு மகளான சந்தானலட்சுமி அனைவரது சம்மதத்துடன் விற்றுவிட்டார். அவர் எனது பெரியம்மா ஆவார். இந்த விவரத்தை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எந்த வருடம் அந்த வீட்டை விற்றார்கள் என்று எனக்குத் தெரியாது. அந்த கிரைய பத்திரத்தில் எனது தாயார் கையெழுத்திடவில்லை. நான் சொல்வது போல் அந்த வீட்டை யாரும் விற்கவில்லை என்றும், இன்னும் அது எனது தாத்தா, பாட்டி பெயரில் தான் உள்ளது என்றாலும் எனக்கு தெரியாது. நான் கேள்விப்பட்டேன். எனது தாத்தா, பாட்டிக்கு மொத்தம் 3 பேர் வாரிசுகள். ராஜமன்னார், சந்தான லட்சுமி மற்றும் என் தாயார் ராஜகாந்தம் ஆகியோர் ஆவர். எனது தாத்தா, என் பாட்டி இறப்பதற்கு முன்பாக இறந்துவிட்டார் என்றால்

சரிதான். எனது பாட்டி 04.02.2008 அன்று காலமானார். சந்தான லட்சுமி 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இறந்தார். சந்தான லட்சுமியின் கணவர் வரதராஜன் அவருக்கு முன்பே இறந்துவிட்டார். அவர்களுக்கு சதர்ஷன் என்கின்ற ஒரே மகன் உள்ளார். எனது தாயார் 23.09.2013ல் இறந்தார். என் தந்தை சூரியசேகரன் என்னுடன் தான் வசிக்கிறார். என் பாட்டிக்கு புரசைவாக்கத்தில் தற்போது வீடுகள் இல்லை. அவற்றை விற்றுவிட்டார். எனது பெரியம்மா அங்கு வசிக்கவில்லை. என் பாட்டியோடு யாரும் உடன் வசிக்கவில்லை. அவ்வப்போது மகள்கள் சென்று பார்த்து வருவார்கள். எனது பாட்டி திருமணத்திற்கு பிறகு எப்போது சென்னைக்கு வந்தார் என்று எனக்கு குறிப்பாக தெரியாது. எனக்கு நினைவு தெரிந்ததில் இருந்து அங்கு வசித்து வந்தார். ராஜமன்னார் மற்றும் சந்தானலட்சுமி ஆகியோரின் திருமணங்கள் காஞ்சிபுரத்தில் பாட்டியின் செலவில் நடந்தது. இந்த விவரத்தை என் பாட்டியும் தந்தையும் பெரியம்மாவும் சொன்னார்கள். என் தாத்தா எந்த ஆண்டு இறந்தார் என்று எனக்குத் தெரியாது. என் பாட்டிக்கு வாடகை வருமானம் இருந்தது. மேட்டுப்பாளையத்தில் மூன்று இடத்தில் நிலம் இருக்கிறது. இரண்டு இடங்கள் எங்கு உள்ளது என்று எனக்கு தெரியும். அதில் இருந்து வருமானம் வந்தது. எவ்வளவு என்று எனக்குத் தெரியாது. இந்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது. இதனை பாட்டி சொல்லி தெரியும். அந்த சொத்துகள் என் பாட்டியின் மூதாதையர் வழிவந்த சொத்துகளாகும். யார் என் பாட்டிக்கு எழுதிவைத்தார்கள் என்று எனக்குத் தெரியாது. அதற்கான வருவாய் ஆவணங்கள் என் பாட்டி பெயரில் உள்ளது. மேட்டுபாளையத்தில் உள்ள முதல் சொத்தின் சர்வே எண். 178 / 3ஏ, அதன் விஸ்தீரணம் 19 செண்டுகள் ஆகும். மேட்டுபாளையத்தில் உள்ள 2வது சொத்தின் சர்வே எண். 191 /1, அதன் விஸ்தீரணம் 49 செண்டுகள் ஆகும். மேற்கண்ட இரண்டு சொத்துகளின் நான்கு எல்லைகள் எனக்குத் தெரியாது. ஆவணத்தில் உள்ளது. எந்த ஆவணத்தில் உள்ளது என்றால் பட்டாவில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 பட்டாவில் 4 எல்லைகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இந்த பட்டாவிற்கு முன்பாக எனது பாட்டி பெயரில் பட்டா

இருந்தது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)